இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து ஆணைக்குழுவின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க

ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் ஆணைக்குழு இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை	**முகாமைத்துவ கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இல் 63 (உ) ஆவது பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் பெறுமதிகள் சமர்ப்பிக்கப்படும் போது மட்டம் தட்டும் முறை பயன்படுத்துப்பட வேண்டிய போதும், 2024	எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது பெறுமதிகளை மட்டம் தட்டும் முறையில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	தொடர்ப்புடைய நியமங்கள் பிரகாரம் மட்டம் தட்டும் முறையை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் பெறுமதிகள் சதத்தால் காண்பிக்கப்பட்டிருந்தது.		
(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இல் 47 ஆவது பந்தியின் பிரகாரம் நியாயமான பெறுமதியின் கவனத்திக்கொள்ளாத மட்டத்திலான வித்தியாசங்கள் மாத்திரம் உள்ள ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண உருப்படிகளை ஒவ்வொரு 03 ஆண்டுகளுக்கு அல்லது 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மீள் மதிப்பீடு செய்ய வேண்டிய போதும், ஆணைக்குழுவினால் மோட்டார் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய கிரயம் ரூபா. 103,965,189 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கிட்டிய 05 ஆண்டுகளினுள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	குறித்துக் கொண்டேன். நிறுவனத்தின் அனைத்து நிலையான சொத்துக்களையும் மீள் மதிப்பீடு செய்ய தீர்மானித்துள்ளதுடன், அதன் பிரகாரம் புதிய மீள் மதிப்பீட்டு பெறுமதிகள் புத்தகங்களில் குறித்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென அறிவிக்கப்பட்டிருந்தது.	தொடர்ப்புடைய நியமங்கள் பிரகாரம் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இல் 65 ஆவது பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட்காலத்தினை குறைத்து ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடும் காலப்பகுதி இறுதித் திகதியில் மீளாய்வு செய்ய வேண்டிய போதும், 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முழுமையாக தேய்வடைந்து முடிவடைந்த கிரயம் ரூபா. 38,321,172 ஆன சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்திருக்கவில்லை. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீடொன்றின் வித்தியாசமாக கணக்கீடு செய்ய வேண்டிய போதும், அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை.	குறித்துக் கொண்டேன். நிறுவனத்தின் அனைத்து நிலையான சொத்துக்களையும் மீள் மதிப்பீடு செய்ய தீர்மானித்துள்ளதுடன், அதன் பிரகாரம் புதிய மீள் மதிப்பீட்டு பெறுமதிகள் புத்தகங்களில் குறித்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென அறிவிக்கப்பட்டிருந்தது.	தொடர்ப்புடைய நியமங்கள் பிரகாரம் பயனுள்ள ஆயுட்காலத்தினை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

	விடயம்	நிதிக்கூற்றுக்களின பிரகாரம் ரூபா.	தொடர்புடைய பதிவேட்டின பிரகாரம் ரூபா.	வேறுபாடு ரூபா.	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	கட்டிடங்கள் பெறுமதி	41,606,860	45,727,010	4,120,150	ஆணைக்குழுவிக்கு சொந்தமான நிலையான சொத்துக்களை சரியாக இனங்கண்டு அவற்றை மீள் மதிப்பிடு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க திட்டமிடப்பட்டு உள்ளதுடன், நிறுவனத்திற்கு சட்டரீதியான உரிமையுள்ள நிலையான சொத்துக்களை மாத்திரம் பேரேட்டு கணக்குகளில் குறித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இத்துடன் சொத்துக்கள் பதிவேடு மற்றும் பேரேட்டு கணக்குகளில் காணப்படும் முரண்பாடுகளை இதன் மூலம் தீர்க்க நடவடிக்கை எடுப்பதென அறிவிக்கப்பட்டிருந்தது.	நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்ட பெறுமதிகள் நேரொத்த அறிக்கையுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும்.
(ஆ)	கணனி, அச்சுப் பொறி, கையடக்க தொலைபேசி மற்றும் மடிக் கணனி போன்ற சொத்துக்கள் தொகுதியின் பெறுமதி	39,531,930	40,874,755	1,342,825	ஆணைக்குழுவிக்கு சொந்தமான நிலையான சொத்துக்களை சரியாக இனங்கண்டு அவற்றை மீள் மதிப்பிடு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க திட்டமிடப்பட்டு உள்ளதுடன், நிறுவனத்திற்கு சட்டரீதியான	நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்ட பெறுமதிகளை நேரொத்த அறிக்கையுடன் இணக்கம் செய்ய வேண்டும்.

உரிமையுள்ள நிலையான சொத்துக்களை மாத்திரம் பேரேட்டு கணக்குகளில் குறித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இத்துடன் சொத்துக்கள் பதிவேடு மற்றும் பேரேட்டு கணக்குகளில் காணப்படும் முரண்பாடுகளை இதன் மூலம் தீர்க்க நடவடிக்கை எடுப்பதென அறிவிக்கப்பட்டிருந்தது.

1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

	விடயம்	தொகை ரூபா.	வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று	முகாமைத்துவத்தின் கருத்துரை	சிபார்சுகள்
(அ)	பொறிகள் மற்றும் உபகரணங்கள்	382,679	விரிவான அட்டவணை	இந்த சொத்துக்கள் 2024 ஆண்டளவில் முழுமையாக தேய்வடைந்து முடிவடைந்துள்ளது. காணப்படும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் குறைபாடுகளை தவிர்த்துக் கொள்ள மற்றும் கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் மதிப்பீடுகளில் காணப்படும் குறைபாடுகள் தவிர்த்துக் கொள்ள 2025 ஆண்டின் போது நடவடிக்கை எடுப்பதுடன், நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை தயாரித்து பராமரிப்பதற்கு குறித்துக் கொண்டேன்.	நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்ட பெறுமதிகளிற்காக உரிய பதிவேடுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும்.
(ஆ)	அலுவலக உபகரணங்கள், கணனி, தளபாடங்கள்	15,656,035	விரிவான அட்டவணை	இந்த சொத்துக்கள் 2024 ஆண்டளவில் முழுமையாக தேய்வடைந்து முடிவடைந்துள்ளது.	நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்ட பெறுமதிகளிற்காக உரிய

	காணப்படும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் குறைபாடுகளை தவிர்த்துக் கொள்ள மற்றும் கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் மதிப்பீடுகளில் காணப்படும் குறைபாடுகள் தவிர்த்துக் கொள்ள 2025 ஆண்டின் போது நடவடிக்கை எடுப்பதுடன், நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை தயாரித்து பராமரிப்பதற்கு குறித்துக் கொண்டேன்.	பதிவேடுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

1.6 பேறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 செலுத்த வேண்டியவைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 திகதிக்கு உள்ளவாறு ரூபா. 6,673,222 ஆன செலுத்த வேண்டிய மீதி காலப் பகுப்பாய்வின் பிரகாரம், 01 ஆண்டிற்கும் குறைந்த மீதி ரூபா. 5,442,797 உம், 01 ஆண்டிற்கும் 02 ஆண்டிற்கும் இடையிலான மீதி ரூபா. 5,461 உம், 02 ஆண்டிற்கும் 03 ஆண்டிற்கும் இடையிலான மீதி ரூபா. 547,681 உம், 05 ஆண்டுகளை விஞ்சிய மீதி ரூபா. 677,283 உம் ஆனதுடன், அந்த செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	காலம் கடந்த மீதிகளை தீர்ப்பதற்குரியதாக நிறுவனத்தின் எதிர்வரும் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழுவில் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.	செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	தேசிய அரச சபை 1978 இன் 27 இலக்க சட்ட உதவி சட்டத்தின் 4 (ஐ) பரிவு	சட்ட உதவி வழங்குவதற்கான ஏதேனும் பிரிவு தொடர்பாக ஆராய்ச்சி ரீதியான நிகழ்சித் திட்டங்களை	ஆணைக்குழுவின் அநேக சட்ட உத்தியோகத்தர்கள் தற்போது பட்டப்பின் படிக்பை கற்றுக் கொண்டிருப்பதுடன்,	தொடர்புடைய சட்டத்தின் பிரகாரம் ஆராய்ச்சி ரீதியான நிகழ்ச்சித்

		செயற்படுத்த வேண்டிய போதும், அவ்வாறு செய்திருக்கவில்லை.	அவர்களின் ஆராய்ச்சி ஆய்வறிக்கைகளிற்காக சட்ட உதவி தொடர்பான துறையொன்றை அடிப்படையாக்க கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் சட்ட உதவி தொடர்பான ஆராயச்சி பற்றி கவனம் செலுத்தப்படும். மேலும், ஆராய்ச்சிக்காக போதிய நிதியை ஒதுக்கும் இயலுமை காணப்படாததன் மீது இந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வது தவறவிடப்பட்டுள்ளது.	திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள எடுக்க வேண்டும்.
(ஆ)	1982 இலக்கம் 43 கொண்ட முத்திரை வரி சட்டம்	ரூபா. 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவிற்காக ரூபா 25 முத்திரை வரி அறவிட வேண்டிய போதும், 13 சந்தர்ப்பங்களில் ரூபா. 590,592 பெறுமதியான கொடுப்பனவிற்காக அவ்வாறு அறவிடப்பட்டிருக்க வில்லை.	குறித்த முத்திரை வரியை அறவிட்டு அதனை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.	தொடர்புடைய சட்டம் பிரகாரம் முத்திரை வரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்**			
(i)	நி.பி. 237(அ) (1)	மேற்கொள்ளப்பட்ட வேலை அல்லது வழங்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது உடன்படிக்கை பிரகாரம் திருப்பதிகரமானதாக வேலை செய்யப்பட்டுள்ளதென உறுதிப்படுத்தியதன் மீது கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டிய போதும், ரூபா. 636,022 தொகையான 16 திருத்துதல்களிற்குரிய அந்த	குறித்துக் கொண்டேன். எதிர்காலத்தில் அனைத்து திருத்தங்களிலும் குறிப்பிடப்படும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது நிதிப்பிரமாணம் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன்.	நிதிப்பிரமாணம் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் சான்றிதழின் மீது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

		கடமைக்குரியதான பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரினது உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்ளாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.		
(ii)	நி.பி. 237(ஆ)	களஞ்சிய வழங்களிற்காக கொடுப்பனவு செய்யும் போது பண்டம் கிடைத்துள்ளதாகவும், குறித்த பண்டக பதிவேட்டில், இருப்பு பதிவேடு போன்றவற்றில் அப் பண்டத்தை உள்ளடக்கி உள்ளதாகவும் சான்றிதழ் ஒன்றை இணைக்க வேண்டிய போதும், சபையின் ரூபா. 886,621 ஆன 08 கொள்வனவுகளின் போது மேற்படி ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	குறித்துக் கொண்டேன். களஞ்சிய வழங்களிற்காக கொடுப்பனவு செய்யும் போது நிதிப் பிரமாண ஏற்பாடுகளை கவனத்திற் கொண்டு கொடுப்பனவு செய்ய குறித்துக் கொண்டேன்.	நிதிப் பிரமாணம் பிரகாரம் பண்டம் கிடைத்துள்ளதாக உறுதிப்பாடொன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	**பொது நிருவாக சுற்றறிக்கை**			
	2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய இலக்கம் 05/2008 மற்றும் 2018 சனவரி 24 திகதிய இலக்கம் 05/2008 (I) கொண்ட சுற்றறிக்கை	அரச துறை செயற்பாடுகளை மிக்க வினைத்திறனாக்குதல் மற்றும் அதற்காக தொடர்ப்புபடும் தரப்பினர்களிற்கிடையில் சிறந்த புரிந்துணர்வு மற்றும் ஒவ்வொருவருக்கிடையிலும் நம்பிக்கையை விருத்தி செய்வதற்கான பிரஜைகள்/சேவைபெறுநர் சத்தியப் பிரமாணத்தினை அறிமுகப்படுத்துவது அனைத்து அரச நிறுவனங்களினாலும் மேற்கொள்ள வேண்டிருந்த போதும், ஆணைக்குழுவினால்	பிரஜைகள்/சேவைபெறுநர் சத்தியப் பிரமாணத்தினை இது வரை தயாரித்து இருக்காததுடன், எதிர்காலத்தில் பிரஜைகள்/சேவைபெறுநர் சத்தியப் பிரமாணத்தினை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	தொடர்ப்புடைய் சுற்றறிக்கை பிரகாரம் பிரஜைகள்/சேவைபெறுநர் சத்தியப் பிரமாணத்தினை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		அவ்வாறான பிரஜைகள்/சேவைபெறுநர் சத்தியப் பிரமாணத்தினை அறிமுகப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.		
(உ)	**பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கை**			
(i)	1971 இன் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2004 ஜுலை 29 ஆம் திகதிய இலக்கம் PED 25 கொண்ட சுற்றறிக்கை.	அரச அமைச்சுகள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசிற்கு சொந்தமான கம்பனிகளினால் தமது நிதியை முதலீடு செய்யும் போது நிதி அமைச்சரினது அல்லது உரிய அமைச்சரினது அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய போதும், மீளாய்வாண்டு இறுதி வரை முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா. 9,144,650 தொகையான நிலையான வைப்புக்களுக்காக மேற்குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த முதலீடு நிறுவனத்தின் சேவை புரியும் ஊழியர்களினது பணிக்கொடை செலுத்தும் அவசர நிதி தேவைபாடொன்று ஏற்படின் அதற்கு தீர்வொன்றாக பேணிச் செல்லும் முதலீடொன்றாகும். திறைசேரி அல்லது கணக்காய்வினால் இது தொடர்பாக வழங்கப்படும் எதிர்கால ஆலோசனை மீது இந்த முதலீடு தொடர்பாக நிறுவனம் செயற்பட நடவடிக்கை எடுப்பதென மேலும் அறிவிக்கிறேன்.	தொடர்ப்புடைய சட்டம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் முதலீடுகளுக்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வெண்டும்.
(ii)	2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட சுற்றறிக்கையின் (பொது முயற்ச்சிகள் மீதான வழிகாட்டி கோவை) 2.3 பந்தியின் மூலோபாய திட்டமிடலின் கீழான அட்டவணையின் 1 இல் 3 ஆம் பகிதி	பிரதான பாதீட்டுக்கு எதிர்வு கூர்வு செய்யப்பட்ட வருமான கூற்று, எதிர்வு கூர்வு செய்யப்பட்ட நிதி நிலைமை கூற்று மற்றும் எதிர்வு கூர்வு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று உள்ளடங்க வேண்டிய போதும், ஆணைக்குழுவினால் தயாரரிக்கப்பட்ட பிரதான பாதீட்டிற்கு மேற்குறித்த ஆவணங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆண்டு முதல் பாதிடப்பட்ட வருமான கூற்று, பாதிடப்பட்ட நிதி நிலைமை கூற்று பாதிடப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றுடன் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	தொடர்ப்புடையவழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஊ)	2018 ஏப்ரல் 27 திகதிய இலக்கம் எம்எஸ்டீடப்/08/65 கொண்ட நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசி அமைச்சினால் வெளியிடப்பட்ட கடிதம்	ஆணைக்குழுவினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை மேற்கொள்வதை ஒருங்கிணைப்பதற்கு உத்தியோகத்தர்களை நியமித்து நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்மொன்றை தயாரித்திருக்கவில்லை.	அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமிக்க முயற்சி எடுக்கப்பட்டதுடன், நிறுவனத்தின் கடமை பரப்பினுள் அதற்குரிய தாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.	தொடர்ப்புடைய கடிதம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டும்.

1.8 காசு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
ஆணைக்குழுவினால் இலங்கை வங்கியில் புதுக்கடை கிளையில் பேணிச் செல்லும் வங்கி நடைமுறை கணக்கில் 2024 சனவரி முதல் திசெம்பர் வரை 12 மாதங்கள் பூராவும் ரூபா. 150,000 முதல் ரூபா. 26,000,000 இற்கிடையிலான, தொகை காணப்பட்டதுடன், இதன் காரணமாக நிறுவனத்தின் மேலதிக நிதி விளைவற்று வங்கிக் கணக்கில் காணப்பட்டது.	எதிர்காலத்தில் நிறுவனத்தின் நிதி முகாமைத்துவம் செய்யப்படும் போது சிறப்பான நிதி அளவொன்றை மாத்திரம் வங்கி நடைமுறை கணக்கில் பேணிச் செல்ல தேவையான நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதியை விளைவற்றதாக வைத்துக் கொள்ளக் கூடாது.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா. 30,741,357 ஆன பற்றாக்குறை ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 8,802,344 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா. 21,939,013 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு வருமானம் ரூபா. 36,049,231 இனால் அதிகரிப்பதற்கு ஒப்பாக செலவினம் ரூபா. 57,988,243 .னால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 திகதி செயலிழந்த நிலையில் காணப்படும் ரூபா. 229,275 பெறுமதியுடைய 03 அலுவலக உபகரணங்கள் மற்றும் ஓட்ட நிலையில் இல்லாத ரூபா. 2,500,000 பெறுமதியான 05 முச்சக்கர வண்டிகளை அகற்ற	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் சொத்தொன்றின் பெறுமதி மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வினை அகற்ற வேண்டியது சொத்துக்களை வெளியேற்றும் சந்தர்ப்பத்தில் ஆகையால், இந்த சொத்தை	அலுவலக உபகரணம் மற்றும் முச்சக்கர் வண்டிகளின் பயன்பாடு மற்றும் ஆயுட்காலம் தொடர்பாக மீளாய்வொன்றை

	நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நிறுவனத்திலிருந்து அகற்றியில்லாததுடன், குறித்த சொத்து நிறுவனத்தில் காணப்படுகின்றது. இச் சொத்துக்களின் பயன்பாடு மற்றும் முன் பயனுள்ள ஆயட்காலம் தொடர்பான மீள்மதிப்பீட்டிற்கு உரியதாக நிபுணத்துவ மற்றும் அறிவுடைய தரப்பினருடன் கூடிய குழுவொன்றின் மூலம் அறிக்கையொன்றை பெற்றுக் கொள்ள வேண்டியதுடன், அக்குழுவின் பரிந்துரையின் மீது குறித்த முன்நடவடிக்கை மேற்கொள்ள குறித்துக் கொண்டேன்.	மேற்கொள்ள வேண்டும.
(ஆ)	இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்துடன் (UNDP JURE-LOA) ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை பிரகாரம் திருத்திய தேசிய சட்ட உதவி கொள்கை மற்றும் செயல்நடவடிக்கை திட்டத்தை வெளியிடல் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டிலும், நன்கொடையாளர் ஒருங்கிணைப்புக் கூட்டத்தை இரண்டாம் காலாண்டிலும் மற்றும் பிணை வழங்குவதற்கு அப்பாற்பட்ட குற்றவியல் விடயங்களிற்காக கட்டண நேரசூசியை தயாரித்தல் மற்றும் வழக்குகளிற்கு உரிய உதவி வழங்க நடைமுறை ஆண்டில் எவ்வித முயற்சியும் எடுத்திருக்கவில்லை. அதற்காக முறையே ரூபா. 2,249,000, ரூபா. 180,000 மற்றும் ரூபா. 637,500 ஒதுக்கப்பட்டு இருந்ததுடன், UNDP நிறுவனத்திடமிருந்து அதன் மூன்றாம் தவணை 2024 நவம்பர் 29 திகதி ஆணைக்குழுவிற்கு கிடைத்திருந்த போது, மேற்குறித்த பணிகளை மேற்கொள்ளாததால் 2024 திசெம்பர் 08 திகதி அத் தொகை மீண்டும் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்தது.	நீதி அமைசினால் திருத்திய தேசிய சட்ட உதவி கொள்கையை மற்றும் செயல்நடவடிக்கை திட்டத்தை உரியவாறு திருத்தி அமைச்சரவை அங்கீகாரத்திற்கு உரிய காலத்தினுள் சமர்ப்பிக்க முடியாததன் காரணமா திருத்திய தேசிய சட்ட உதவி கொள்கை மற்றும் செயல்நடவடிக்கை திட்டத்தை வெளியிட முடியாதிருந்தது.	குறித்த பணிகளை உரிய காலப் பகுதியினுள் விரைவில் மேற்கொள்ள திட்டமிட வேண்டும்.

(இ)	சட்ட உதவி முகாம் மற்றும் அறிவுருத்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக முதல் 03 காலாண்டினுள், உடன்படிக்கை பிரகாரம் ரூபா. 16,830,000 ஒதுக்கியிருந்த போதும், 2024 திசெம்பர் 31 திகதி வரை, அதற்குரிய செயற்பாடுகளிற்கு ரூபா. 13,035,683 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மொத்தமாக ஒதுக்கப்பட்ட நிதி அளவின் 23 சதவீதம் 2024 திசெம்பர் 31 திகதி வரை பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	செயற்திட்டத்தை 04 காலாண்டுகளிற்கு செயற்படுத்த உடன்படிக்கை செய்திருந்ததுடன் உடன்படிக்கை பிரகாரம் அடுத்த காலாண்டிற்காக கிடைத்த தொகையின் 80 சதவீதம் அந்த காலாண்டிற்குரிய செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டு இருக்க வேண்டும். சட்டரீதியான அறிவுருத்தல் மற்றும் சட்ட உதவி முகாமிற்காக ஒரு நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா. 66,000 தொகை ஒதுக்கப்பட்டதுடன் ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டங்களிற்குமான ரூபா 66,000 தொகையிலிருந்து செலவிடப்படாது ஒரு தொகை எஞ்சியுள்ளதுடன் அத் தொகை மீதியாக எஞ்சியுள்ளது.	ஒதுக்கப்பட்ட நிதியத்தை உரியவாறு பயன்படுத்த வேண்டும்.
(ஈ)	சட்ட உதவி வழங்குவதனை மிகவும் ஒழுங்காக மேற்கொள்ள மற்றும் பொது மக்களிற்கு மிகவும் முக்கியமானவாறு ஆக்கபூர்வ சேவையை பெறுவதற்காக இந்த நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு இயலுமானவாறு முறைமை ஒன்றை தயாரிக்க 2016 ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ள போதும், தேசிய சட்ட உதவி கொள்கையை தயாரித்தலை 2024 திசெம்பர் 31 திகதி வரை நிறைவு செய்திருக்கவில்லை.	இது பலதரப்பு பணியொன்றாவதால், பல்வேறு கலந்துரையாடல்கள் இது தொடர்பாக மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.	தேசிய சட்ட உதவி கொள்கையை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	நிகழ்காலத்தில் ஆணைக்குழுவிற்கு உத்தியோகபூர்வ இணையத் தளமொன்று காணப்படவில்லை. இதற்கு முன்னர் காணப்பட்ட இணையத் தளம் தொழில்நுட்ப சேவை வழங்கல் நிறைவுற்றதால் அதன் செயற்பாடுகள் காலாவதியாகி உள்ளதாகவும் மற்றும் UNDP-JURE செயற்திட்டம் மூலம் அன்பளிப்பாக புதிய இணையத் தளமொன்றை தற்போது வடிவமைப்பதாகவும் கணக்காய்விற்கு அறிவித்துள்ள போதும், இது வரை உத்தியோக	ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் (UNDP) செயற்படும் JURE செயற்திட்டம் மூலம் செயற்படும் இணையத் தளத்தை வடிவமைக்கும் நடவடிக்கை தற்போது இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது.	உத்தியோக பூர்வ இணையத் தளத்தை வடிவமைத்து நிறைவு செய்ய வேண்டும்.

	பூர்வ இணையத் தளத்தை வடிவமைத்து நிறைவு செய்திருக்கவில்லை.		

3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 சனவரி 01 ஆம் திகதி வரை ஆணைக்குழுவிற்குரியதாக முன் கொண்டுவந்த வழக்குகள் 38,905 ஆனதுடன், 2024 ஆண்டினுள் அவற்றில் 23,709 மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 2024 வருட ஆரம்பத்தில் நிலவிய வழக்குகளில் 2024 திசெம்பர; 31 திகதி வரை தீர்க்கப்படாது நிலவிய வழக்குகளின் எண்ணிக்கை 39 சதவீதமாகும்.	வழக்கு பிற்போடப்படல் மற்றும் தாமதித்தல் சட்ட உதவி ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயமாகையால், அந்த வழக்கு அளவுகளே காணப்படுகின்றன. மேலும், வழக்கு தாக்கல் செய்தல் மற்றும் நிறைவு செய்தல் சாதாரண செயன்முறையாக்க காணப்படுவதால் எஞ்சியுள்ள மீதிகள் காணப்படுகின்றன.	தீர்க்கப்படாத வழக்குகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2024 ஆண்டினுள் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 12,362 ஆனதுடன், அந்த வழக்குகளில் தீர்க்கப்பட்ட வழங்குகளின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் கணக்காய்வு திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	ஆண்டு இறுதி அறிக்கையை தயாரித்தல் தீவு முழுவதும் அமைந்துள்ள சட்ட உதவி நிலையங்களிலிருந்து தகவல்களை பெற்று செய்யப்படுகின்றது. அதன் பிரகாரம் 2024 ஆண்டிற்காக நீதிமன்றம் சார்ந்த நடவடிக்கைகள் தொடர்பான எண்ணிக்கை ரீதியான பெறுமானங்களை சமர்ப்பிக்கிறேன்.	உரிய காலப் பகுதியில் கணக்காய்விற்கு தகவல்களை சமர்ப்பிக்க வேண்டும்.

3.3 பெறுகை முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2006 ஆண்டு பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.2.1(ஆ) பிரகாரம் பிரதான பெறுகைகள் திட்டத்தில் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் காலத்திட்காவது எதிர்பார்க்கப்படும் பெறுகைகள் நடவடிக்கைகளை பட்டியற்படுத்தியிருக்க வேண்டிய போதும், ஆணைக்குழுவினால் 2024 ஆண்டில் தயாரிக்கப்பட்ட பிரதான பெறுகைகள் திட்டத்தில் 2024 ஆண்டிற்குரிய பெறுகை நடவடிக்கைகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தன.	2025 - 2027 ஆண்டுகளிற்காக பெறுகைகளை மேற்கொள்ளும் போது பிரதான பெறுகைகள் திட்டமொன்றை தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க செயற்படுகிறேன்.	பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் 03 ஆண்டு காலத்திற்கு பெறுகைகள் திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	2006 ஆண்டு பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.2.1(உ) பிரகாரம் பிரதான பெறுகைகள் திட்டத்தை ஆறு மாதங்களிற்கு மேற்படாத காலத்தினுள் நிதமும் நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும், பிரதான பெறுகைகள் திட்டத்தை தயாரிக்காததனால் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது.	பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.2.1(உ) பிரகாரம் நடவடிக்கை எடுக்க எதிர்காலத்தில் செயற்படுகிறேன்.	பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் பெறுகைகள் திட்டத்தை நாளாது வரையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.2.2(அ) பிரகாரம் ஒவ்வொறு பெறுகை நடவடிக்கைகளும் ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் இருந்து முடிவுறுத்தும் வரை ஒவ்வொறு பெறுகை செயற்பாடுகளினதும் படிமுறைகளை கால முறைக்குட்படுத்தி விபரிக்கும் பெறுகைகள் நேரசூசி ஒன்றை ஆணைக்குழுவினால் 2024 ஆண்டிற்காக தயாரித்திருக்கவில்லை.	2025 ஆண்டின் பெறுகைகள் கால சட்டகமொன்றை தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் பெறுகைகள் நேரசூசியை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 2.5.1(ஊ) பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை மற்றும் பரிந்துரையை மீளாய்வு செய்தல் மற்றும் 8.1 விழிகாட்டிக் கோவைக்கு இணங்க நிர்ணயித்தல் /பரிந்துரைத்தல் பெறுகைகள் குழுக்களில் கடமைகளான போதும், ஆணைக்குழுவில் பெறுகைகள் குழுவொன்று இல்லாத காரணத்தால் அனைத்து பெறுகைகளினதும் தொழில்நுட்ப குழுவின் தீர்மாத்தின் மீது மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு பணிப்பாளர் சபையினால் அங்கீகரித்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆண்டில் பெறுகைகள் குழு விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன.	பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளில் தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரையை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	2006 ஆண்டு பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 6.3.6 பிரகாரம் விலைமனு திறப்பது தொடர்பான நடவடிக்கைகள் பெறுகைகள் நடைமுறைக் கோவையின் 6.3.6 இல் குறிப்பிடும் படிவமொன்றில் அறிக்கையிட வேண்டியதுடன், அந்த அறிக்கை குறிப்பில வலைமணு திறக்கும் குழுவின் அனைத்து அங்கத்தரினாலும் கையொப்பமிட வேண்டிய போதும், ரூபா 177,365 பெறுமதியான தளபாடங்களை	2025 ஆண்டிற்காக பெறுகைகள் குழுவின் மூலம் குறித்த பணிப்பொறுப்புக்கள் மேற்கொள்ளப்படும்.	பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் விலைமணு திறத்தலை ஆவணப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொள்வனவு செய்யும் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		

3.4 மனித வளங்கள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
சிரேஷ்ட மட்டத்தின் அங்கீகார பதவியணி 152 ஆன போதும், உண்மையான பதவியணி 120 ஆனதில் சிரேஷ்ட மட்டத்தின் 05 பதவிகளில் 32 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. அதன் பிரகாரம் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் (சட்டம்), பணிப்பாளர் (கட்டுப்பாடு/நிதி மற்றும் ஆணைக்குழுவின் செயலாளர்), உதவி பணிப்பாளர் / பிரதி பணிப்பாளர் (பிராந்தியம்) ஆகிய பதவிகளும், 28 சட்ட உத்தியோகத்தர்களும், வெற்றிடமாக காணப்பட்டன.	வெற்றிடங்களின் அங்கீகாரத்திற்காக அனைத்துவித கோரிக்கைகளையும் நீதி அமைச்சு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஊடாக பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. எனினும் இதுவரை அங்கீகாரம் கிடைக்கவில்லை.	வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் 40(1) பந்தி பிரகாரம் ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அந்த ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டு சபையினால் நியமனம் செய்யப்படும் தமது உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இருக்க வேண்டிய போதும், ஆணைக்குழுவினால் அங்கீகார பதவியணியில் உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்று அங்கீகரித்துக் கொண்டிருக்கவில்லை.	உள்ளக கணக்காய்வாளர் பதவியை ஏற்படுத்துவதற்காக ஆட்சேர்ப்பு திட்டத்தை திருத்துவதற்கு தேவையான கோரிக்கையை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	2018 இன் 19 ஆம் இலக்க கொண்ட கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
பொறிகள் மற்றும் உபகரணங்கள் பராமரிப்பிற்காக ரூபா. 2,000,000 ஆன நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும், 2024 திசெம்பர் 31 திகதி வரையும் எவ்வித நிதிஏற்பாடும் செலவிடப்பட்டிருக்கவில்லை.	கருத்து தெரிவிக்கப்படவில்லை	தேவையான அளவிற்கு நிதிஏற்பாட்டை ஒதுக்கிகொள்ள வேண்டும்.